பக்கங்கள் 20



# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 22 ஞாயிற்றுக்கிழமை 07.01.2024 அதிர்வு 160


## டெங்கு ஒழிப்பு வாரம் இன்று முதல் பிரகடனம்



நாட்டில் இன்று முதல் விசேட டெங்கு ஒழிப்பு வாரம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார 04▶





### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து

(கி.வசந்தரூபன்)

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுக்க வேண்டும். சிவில் அமைப்புக்களுடனும், இலங் கைத் தமிழரசுக் கட்சியுடனும் இது தொடர்பில் பேசுவோம். கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கு முயற்சிப்போம்." 04▶



# ஐ.நா. மீது தமிழர்கள் நம்பிக்கை இழப்பு

### இலங்கை அரசுக்கு எதிராக சரியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு

(கி.வசந்தரூபன்)

"ஐ.நா. மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள். இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் காட்டமாக இருந்தாலும் அவை தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிராக சரியான நிலைப்பாட்டை ஐ.நா. எடுக்கவில்லை."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டினார்.

வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் இன்று நடைபெற்ற 04▶






# உண்மையான நல்லிணக்கம் என்றால் எம் உறவுகளை விடுதலை செய்யுங்கள்

## ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு எடுத்துரைப்பு

"சமூகங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் மலர வேண்டுமானால், சிறையில் வாடும் எமது 12 தமிழ் அரசியல் கைதிகளையும் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் விடுதலை செய்ய வேண்டும்" – என்று ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வடக்கு நோக்கிய விஜயத்தை இலக்கிருத்தி கடந்த வாரம் முதல், சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்து வேட்டையைக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு முன்னெடுத்திருந்தது.

அந்தவகையில், மிக நீண்ட காலங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும், எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக விடுதலை செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்னிறுத்தி மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பட்டவர்களிடம் இருந்தும் திரட்டப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய குறித்த மகஜர், நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதன்போது ஜனாதிபதியிடத்தில், "சமூகங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் மலர வேண்டுமானால்,



சிறையில் வாடும் எமது 12 தமிழ் அரசியல் கைதிகளையும் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் விடுதலை செய்ய வேண்டும்" எனத் தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன், அதற்கான கையெழுத்து மகஜரையும் ஜனாதிபதியிடத்தில் கையளித்துள்ளார்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

"மிக நீண்ட காலமாகச் சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள். இந்த நாட்டின் கௌரவ ஜனாதிபதி என்ற வகையில், இந்த அழகிய சிறிய தீவில் வாழும் இனங்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் அரசியல் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர, அரசையும் சம்பந்தப்பட்ட தரப்பினரையும் ஒரு நியாயமான மற்றும் நிலையான சமாதானத்தை நோக்கி நகர்த்தும் வேலைத் திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்.

மூன்றரை தசாப்த கால யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தமிழ் – சிங்கள இனங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் இன முறுகல் மற்றும் முரண்பாடு காரணமாகப் பரஸ்பர புரிந்துணர்வும் நம்பிக்கையும் இன்னும் துளிர்விடவில்லை. தற்போதுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும் வரை இந்த நாட்டில் இன முரண்பாடுகளும் அவநம்பிக்கையும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இந்த நாட்டில் நீண்டகாலமாக இனம் என்ற வகையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன, அரசியல் பிரச்சினைகளுக்கு நீதியான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது அவசியமானதுடன், போரினாலும் மற்றும் இன்றும் போரின் விளைவுகளாலும் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிரந்தர நீதியைப் பெற்றுக் கொடுப்பதும் அவசியமாகும். சமூகக் கண்ணோட்டம் கொண்ட மனித நேயமுள்ள சிவில் அமைப்புகளாக நாம் இதன் மூலம் மட்டுமே இலங்கைத் தீவில் உண்மையான, நிலையான, நியாயமான அமைதியை அடைய முடியும் என்று நம்புகின்றோம்.

இவ்வகையில் நீண்டகாலமாகத்

(03ஆம் பக்கம் பார்க்க)

# சத்தியலீலாவை நான் மன்னித்துவிட்டேன்!

## சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அந்தப் பெண்மணியின் விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பேன் என டக்ளஸ் உறுதிமொழி

“சத்தியலீலா என்ற பெண்மணியை எப்போதோ நான் மன்னித்துவிட்டேன். ஆகையால், இந்த விடயம் சம்மந்தமாக நான், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அவரது துரிதமான விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அருகில் இருந்து உறுதியளித்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்டு, முன்பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான செ.சத்தியலீலா என்பவர், கடந்த 2004 ஆம் ஆண்டு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான குண்டுத் தாக்குதல் சம்பவம்தொடர்பில், அவசரகாலச் சட்டவிதியின் கீழ் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவ்வாறிருக்க, வழக்கு விசாரணையின்போது கொழும்பு மேல்நீதிமன்றம் இவருக்கு ‘15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட, இரண்டாண்டு கால சிறைத் தண்டனையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்கின்ற நிபந்தனையுடன் 2018 ஆம் ஆண்டு விடுதலை செய்துள்ளது.

எனினும், மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருப்தியுற்றிராத சட்டமா அதிபர் திணைக்களம் அத்தீர்மானத்தை ஆட்சேபித்து மேல் முறையீட்டு நீதிமன்றில் மேல்முறையீடு செய்திருந்தது. அந்தவகையில், மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேல் நீதிமன்றத் தீர்ப்பை நிராகரித்து, அரசியல் கைதியான சத்தியலீலாவுக்கு 2023 இல் மரண தண்டனைத் தீர்ப்பளித்துள்ளது.



இந்நிலையில் அவர், மேல்முறையீட்டு நீதிமன்றம் தனக்கு அளித்த தண்டனத்தீர்ப்பை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி வழக்கிலிருந்து விடுவிக்குமாறு உயர் நீதிமன்றில் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறிருக்கையில் சத்தியலீலா, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரலுயர்த்தி வருகின்ற, ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் கூடாக ஜனாதிபதிக்கு ஒரு கருணை மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர், “என்னைப் பொறுத்தமட்டில் 14 வருடங்களாக பட்ட துன்ப துயரங்களுக்குப் பின்னரும் ஒரு மரணதண்டனைக் கைதியாக மீண்டும் சிறைக்குச் செல்வதை இந்த ஜென்மத்தில் நினைத்துப் பார்க்கவே முடியாது. அதைவிட உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்.

எனவே, ஜனாதிபதி அவர்கள், என் பிள்ளைகளையும், பெற்றோரையும் பிரிந்து 14 ஆண்டுகாலம் சிறையில் வாடி விடுதலையான பின்பும் மரணதண்டனைத் தீர்ப்பிற்கு ஆளாகியுள்ள எனக்கு கருணை அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்கி எனது இயல்பு வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும்” – என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது, குரலற்றவர்களின் குரல் அமைப்பால், குறித்த பெண்மணியின் கருணை மனு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்போது, ஜனாதிபதிக்கு அருகிலிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, “அந்தப் பெண்மணியை எப்போதோ நான் மன்னித்துவிட்டேன். ஆகையால், இந்த விடயம் சம்மந்தமாக நான், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அவரது துரிதமான விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பேன்” – என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

---

## உண்மையான...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையானது தமிழ் மக்கள் மத்தியில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக உள்ளது. தற்போதுள்ள இனப் பதற்றத்தைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண முயற்சியாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நீங்கள் ஏற்கனவே ஆரம்பித்திருந்தீர்கள். ஆனால், தற்போது அவ்வேலைத் திட்டம் தேக்கமடைந்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை தொடர்வது நல்லிணக்க முயற்சியாக தமிழ் மக்களுக்கு தங்கள் மீது வலுவான நம்பிக்கையை ஏற்படுத்த உதவும்.

வரலாறு முழுவதும், அரசியல் கைதிகள் அல்லது போர்க் கைதிகளின் விடுதலை அல்லது பரிமாற்றம் என்பது பிளவுபட்ட அல்லது போரில் இருக்கும் இரு தரப்பினரிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிக்கும் செயலாக இருந்து வருகின்றது.

நீக்கப்பட வேண்டியதும் சர்வதேச ரீதியில் நாட்டிற்கு அவமானத்தைத் தருவதுமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் காரணமாக நீண்டகாலமாக (15 முதல் 28 ஆண்டுகள் வரை) சிறையில் வாடும் 12 தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் அதே சட்டத்தின் காரணமாக 14 ஆண்டுகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேல் நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொண்டு ‘15 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூபா 25000 அபராதம்’ எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின் சட்டமா அதிபரின் மேன்முறையீட்டுக்கு அமைய மேன்முறையீட்டு நீதி மன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி செ.சத்தியலீலா ஆகியோரை யும் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் விடுவித்து அவர்களது உறவினர்களுடன் சாதாரண வாழ்க்கை வாழ அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

நீண்ட கால சிறைவாசம் காரணமாக இந்த தமிழ் அரசியல் கைதிகள் முதியவர்கள், நோயாளிகள், சிறையில் இளமையை இழந்தவர்கள் என உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டு, தினம் தினம் விடியலை எதிர்பார்த்து நடை பிணங்களாக சிறையில் வாடுகின்றனர்.

மனிதாபிமான அடிப்படையிலும் மற்றும் இனங்களுக்கடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டும் திருமதி சத்தியலீலா உட்பட, எஞ்சிய 12 தமிழ் அரசியல் கைதிகளையும் அனைத்து வழக்குகளில் இருந்தும் குற்றச்சாட்டுகளை விலக்குவது மூலமும் அல்லது தண்டனைகளில் இருந்து பொது மன்னிப்பு வழங்குவதன் மூலமும் எந்தவித பாகுபாடும் இன்றி உடனடியாக விடுதலை செய்யுமாறு, துன்பப்படும் எமது மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.” – என்றுள்ளது.

# அடக்கம் செய்யப்பட்ட யுவதியின் சடலத்தைத் தோண்டி பாதக செயல்

## பண்டாரவளையில் கொடூரம்

( ராமு தனராஜ் )

பண்டாரவளை, பிந்துனுவெவ பகுதியிலுள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட யுவதி ஒருவரின் சடலம் மீளத் தோண்டி எடுக்கப்பட்ட நிலையில் இன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று பண்டாரவளை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிந்துனுவெவ, படுலுகஸ்தென்ன பகுதியில் வாழ்ந்த 25 வயதுடைய ரஷ்மிகா நதிஷா என்ற யுவதி நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்த நிலையில் அவரின் சடலம் கடந்த 4 ஆம் திகதி அடக்கம் செய்யப் பட்டது.

எனினும், குறித்த யுவதியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு மயானப் பகுதியில் போடப்பட்டுள்ளதை யுவதியின் உறவினர் ஒருவர் இன்று கண்டுள்ளார். அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தார்.

அதன்பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழுவொன்று, விசாரணைகளை நடத்தியது.

யுவதி புதைக்கப்பட்ட இடத்தில் குழி மீளத் தோண்டப்பட்டு, சவப்பெட்டியின் மேல் பகுதி திறக்கப்பட்டு, உள்ளே இருந்த சடலம் வெளியே எடுக்கப்பட்டு ஓரமாக வீசப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். ஆடைகள் களையப் பட்டு சடலம் நிர்வாணமாகவே இருந்தது.

பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் ஆலோசனையின் பிரகாரம், இது தொடர்பில் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்துக்குத் தகவல்கள் வழங்கப்பட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பதில் தலைமையகப் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.கே.பண்டார தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்த் தேசியக்...

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது நில அபகரிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம். இன்னும் பல விடயங்களை பேசியிருந்தோம். நாம் கூறும் விடயங்கள் உடனடியாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் சென்றிருந்தோம். ஆனால், அது நடைபெறவில்லை. நாங்கள் கேட்ட விடயங்களுக்கான சரியான பதிலை அவர் தரவில்லை. சம்பிரதாயபூர்வமான ஒரு கூட்டமாகவே இது இடம்பெற்றது. பல அபிவிருத்திகள் அறிவிக்கப்பட்டாலும் கூட அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி வந்து சென்ற பின்னர் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அது என்ன தேவைக்காக அமைக்கப்பட்டது என்ற விடயம் தெரியவில்லை. எமது மக்களை அச்சுறுத்துவதற்கான செயற்பாடே அது. ஏற்கனவே பொலிஸ் சோதனைச் சாவடி அங்கு இருக்கின்றது. இந்நிலையில், இராணுவத்தின் தேவை என்ன என்று புரியவில்லை. இது தொடர்பாக நாம் நாடாளுமன்றிலும் ஜனாதிபதியிடமும் பேசுவோம். இது அகற்றப்பட வேண்டிய முகாம். சிவில் நிர்வாகம் என்பது பொலிஸாரிடம்தான் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் வவுனியா வருகையின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தைப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தினர். இதன்போது கைது நடவடிக்கை இடம்பெற்றிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவர் கைது செய்யப்பட்டார். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். தமது உறவுகளைத் தேடி பல வருடங்களாகப் போராடி வரும் ஒருவரை ஜனாதிபதிக்கு எதிரான போராட்டமாகப் பார்க்காது அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை.

இது ஒரு தேர்தல் ஆண்டு. ஜனாதிபதித் தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா எனப் பேசப்பட்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பல ஊகங்கள் பேசப்படுகின்றன. வடக்கு – கிழக்கில் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத சூழலில் இந்தத் தேர்தலைக் கையாளும் விதம் தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக நாம் பரிசீலிக்க வேண்டும்.

எமது கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டுமானால் இந்த முயற்சியே பலனளிக்கும் என்று நான் நினைக்கின்றேன். அந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருக்கின்றது. இதில் பல கட்சிகள் தங்களது கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தனது கருத்தைச் சொல்லியிருக்கின்றார். தமிழரசுக் கட்சி இன்னும் முடிவை அறிவிக்கவில்லை. இருந்தாலும் இடைமட்டத் தலைவர்கள் பொதுவான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவில் அமைப்புக்களுடனும், தேசிய கட்சிகளுடனும் பேசி ஒரு ஒற்றுமையான முடிவுக்கு வருவது சாலச்சிறந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமை சாத்தியமா என்ற கேள்வி இருந்தாலும், சிவில் அமைப்புக்கள், தமிழரசுக் கட்சி என்பவற்றுடன் பேச வேண்டியுள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியுடனும் பேசுவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்வோம்.

அந்தவகையில் முழுமையாக எடுக்கும் முடிவே சாத்தியமாகும். தென்னிலங்கை வேட்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஒரு நிபந்தனைக் குட்படுத்த வேண்டும்." – என்றார்.

### ஐ.நா. மீது...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கை அரசால் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் மோசமானதாகவே உள்ளது. அதன்மூலம் ஜனநாயகப் போராட்டங்கள் தடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. பத்திரிகை சுதந்திரம் கட்டுப்படுத்தப்படும் சந்தர்ப்பமும் உள்ளது. இதற்கு நாம் நாடாளுமன்றத்தில் எதிர்ப்பைக் காட்டுவோம்.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் எப்படிப் பாய்ந்தது என்று நாம் பார்த்தோம். போராட்டங்களை முன்னெடுக்கும்போதும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிலைப்பாடாக உள்ளது. எனினும், இலங்கை அரசு அதை ஏமாற்றி வருகின்றது.

ஐ.நா. மீதும் எமது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள். இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் காட்டமாக இருந்தாலும் அவை தொடர்பில் இலங்கை அரசுக்கு எதிராக சரியான நிலைப்பாட்டை ஐ.நா. எடுக்கவில்லை. பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்பது எமது மக்களின் கோரிக்கையாகவுள்ளது. எனவே, புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எம்மால் ஏற்க முடியாது." – என்றார்.

### டெங்கு...

அமைச்சு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 70 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை உள்ளடக்கி இந்த டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வேலைத்திட்டம் பற்றி மக்களுக்கு அறிவிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான இந்த நியமனம், இலங்கை மருத்துவ சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.



# வெள்ளவத்தையில் ரயிலுடன் மோதி வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் ரயிலுடன் மோதிய வெளிநாட்டவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் (06) காலை வெள்ளவத்தை ரயில் கடவையில் இடம் பெற்றுள்ளது.

காலியிலிருந்து கொழும்பு நோக்கி வந்த ரயிலுடன் மோதிய நிலையிலேயே இந்த வெளிநாட்டவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தொடர்பான விவரங்கள் இதுவரை வெளிவரவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வெளிநாட்டவர் கவனக்குறைவால் உயிரிழந்தாரா அல்லது தவறான முடிவெடுத்துத் தனது உயிரை மாய்த்துக் கொண்டாரா என்பது தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளிவரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# சீதா கதுல ஓயாவில் நீராடச் சென்றிருந்த பெண் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு!

**(மஸ்கெலியா நிருபர்)**

சிவனொளிபாத மலைக்குத் தரிசிப்பதற்காகச் சென்ற பெண் ஒருவர் சீதா கதுல ஓயாவில் நீராடச் சென்ற போது தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்கு யாத்திரிகள் குழுவுடன் சென்றிருந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று (06) இரவு 7 மணியளவில் நல்லதண்ணி நகரின் வாகன தரிப்பிடத்துக்குக் கீழே ஓடும் சீதா கதுல ஓயாவில், படியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என்று நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

பனாகொட, பன்னிமுல்ல, பரணவல பகுதியைச் சேர்ந்த பி.எல். மலானி என்ற 58 வயதுடைய பெண்ணே தலையில் பலத்த காயமடைந்த நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஆபத்தான நிலையில் இருந்த பெண் உடனடியாக நல்லதண்ணி சுகாதார சேவை நிலையத்தின் அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனவும் நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது என்றும் நல்லதண்ணி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிங்களத்தின் புதிய சட்டம்

தமிழர் தேசத்துக்கு எதிரான சிங்களத்தின் மற்றொரு குரூர முகம் பிறிதொரு வடிவத்தில் அரங்கேறுகின்றது.

சிங்களத்தின் நாடாளுமன்றத்திற்கு விரைவில் வரப் போகின்ற ஒரு சட்டமூலம் சிங்களத்தின் குயுக்தித்தனமான அணுகுமுறையை அம்பலப்படுத்துவதாக அமைகின்றது.

தமது இனத்தின் இருப்புக்காகவும், சுதந்திரத்திற்காகவும், வாழ்வுரிமைகளுக்காகவும் தமிழர் தேசம் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்த தென்னிலங்கை, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சுதந்திர விடுதலைப் போராளிகளை 'பயங்கரவாதிகளாக' அடையாளம் காட்டுவதற்காக அடிப்படைச் சட்டக் கோட்பாடுகளுக்கு முரணான பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியது. சிங்கள ஆயுதப் படைகளுக்கும் பொலிஸாருக்கும் இந்தச் சட்டம் சர்வ அதிகாரங்களையும் வழங்கியது. எவரையும் காரணமின்றிக் கைது செய்தல், நீதிமன்ற விசாரணையின்றி நீண்ட காலம் சிறைகளில் தடுத்து வைத்தல், சித்திரவதை செய்தல் முதலிய மோசமான அதிகாரங்களை அந்தச் சட்டம் அரச படைகளுக்கு வழங்கியது.

தமிழ்த் தேசிய இனம் மீதான வரலாற்று கொடூரங்களைப் புரிய அடிப்படையாக இருக்கும் இந்தச் சட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது.

தடுப்புக் காவல் கைதி ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட ஒப்பமொன்றை வைத்து, அவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் எனத் தெரிவித்து, அதன் அடிப்படையில் அவரைக் குற்றவாளியாக்கும் கொடூர ஏற்பாட்டையும் இந்தச் சட்டம் கொண்டிருக்கின்றது. இதுவே அப்பாவித் தமிழ் மக்கள் பலரை பல தசாப்தங்கள் சிறைகளில் வாடி, வாழ்வைத் தொலைக்கவும், குற்றவாளிகளாக்கப்பட்டுச் சித்திரவதைத் தண்டனைகளை அனுபவிக்கவும் வழி செய்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்த சிங்கள அரசு, அதை அடக்குவதற்கு 'முள்ளை முள்ளால் எடுப்பது' என்ற கோட்பாட்டில் அரச பயங்கரவாதத்தைத் தமிழர் தரப்பு மீது ஏவிவிட்டது. பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் வெல்லுதல் என்ற விநோதக் கோட்பாடுடன் செயல்பட்டது.

இப்போது தமிழர்களையும் அவர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தையும் தனது அரச பயங்கரவாதம் மூலம் அழித்தொழித்த சிங்களப் பேரினவாதம் அதற்காக சர்வதேசத்தின் முன் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவற்றில் ஈடுபட்டமைக்காக பொறுப்பு கூறல் கடப்பாட்டை எதிர்நோக்கும் இக்கட்டில் சிக்கியிருக்கின்றது.

தமிழர்களின் போராட்ட செயற்பாடுகளை - நடவடிக்கைகளை - குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மூலமாக பயங்கரவாதச் செயல்களாகக் காட்டி, அவற்றுக்காகத் தமிழர்களை தண்டிப்பதற்கு என பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கொண்டு வந்த சிங்களப் பேரினவாதம், இப்போது பொறுப்பு கூறல் கடப்பாட்டின் அடிப்படையில் சர்வதேச விசாரணை நியாயாதிக்கத்துக்குள் சிக்கியிருக்கும் தனது அரச படைகளை 'அரச பயங்கரவாத குற்றங்களில்' இருந்து தப்பிக்க வைப்பதற்கு விநோதமான ஒரு புதிய சட்டத்தை கொண்டு வருகின்றது.

அப்பாவித் தமிழர்களைப் பயங்கரவாதிகளாக சித்திரித்து குற்றவாளிகளாக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து 45 ஆண்டுகளாக அதனை நடைமுறையில் வைத்திருக்கும் சிங்களம், மறுபுறம் அரச பயங்கரவாதத்தை புரிந்த படையினரை காப்பாற்றுவதற்கு 'உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவை' உருவாக்குவதற்கான சட்டமூலத்தை கொண்டு வருகின்றது.

அந்த ஆணைக்குழுவின் முன் எவரும் வழங்கிய சாட்சியங்கள் அவருக்கு எதிராக எந்த ஒரு சிவில் அல்லது குற்றவியல் நீதிமன்றத்திலும் ஒரு விடயமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று இப்போது நாடாளுமன்றத்துக்கு வரும் புதிய சட்டமூலம் தெரிவிக்கின்றது.

அதாவது தமிழர்கள் தடுப்புக் காவல் சித்திரவதைக்கு மத்தியில் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கியதாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலம், அவரைப் பயங்கரவாதியாகச் சித்திரித்து ஆயுள் தண்டனை விதிக்க பயங்கரவாத தடை சட்டத்திற்கு போதுமான விவகாரமாகின்றது.

ஆனால் மேற்படி ஆணைக்குழுவின் முன் அரச படைத்தரப்பு கூறப் போகின்ற உண்மைக்காக அவர் மீது எந்த அடிப்படையிலும், எந்த சிவில் அல்லது கிரிமினல் நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யவும் முடியாது, அதை அவருக்குக்கு எதிரான சாட்சியமாக எந்த நீதிமன்றத்திலும் பயன்படுத்தவும் முடியாது. இதுதான் புதிய சட்டமூலத்தின் கோட்பாடு.

என்ன நாடு இது? இங்கு நிலைநிறுத்தப்படுவதற்குப் பெயர் பௌத்த தர்மமா?அல்லது அது நீதியா?

கடவுளுக்குத்தான் வெளிச்சம்.



# பொருளாதாரத்தைப் பேணும் நோக்கே வாகன இறக்குமதித் தடைக்குக் காரணம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக, இலங்கை அரசு, தனியார் மோட்டார் வாகன இறக்குமதி தடையை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிய இயந்திர திறன் கொண்ட வாகனங்கள் மற்றும் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று செய்திகள் பரவியுள்ளன.

எனினும், இலங்கை அரசு பொருளாதார விவேகத்துக்கான அதன் உறுதிப்பாட்டில் உறுதியாக உள்ளது.

அரசின் கவனம் பொருளாதார ஸ்திரத் தன்மையில் உள்ள நிலையில், நாடு அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்தக் கூடிய அவசர முடிவுகள் எதுவும் எடுக்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டின் கையிருப்பு மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு, உறுதியான ஆரோக்கிய நிலையை அடையும் போது மட்டுமே வாகன இறக்குமதி மீதான தடை நீக்கம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# கணவனை கூரிய ஆயுதத்தால் தாக்கிக்கொலை செய்த மனைவி!

## மஹியங்கனை பொலிஸாரால் கைது!!



தனது கணவனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் மஹியங்கனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தனது கணவன் மதுபோதையில் வீட்டுக்கு வந்து தன்னையும் இரண்டு பிள்ளைகளையும் தாக்கி தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று கைது செய்யப்பட்டுள்ள பெண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று இரவு சுமார் 11.30 மணியளவில் மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் பெண் ஒருவரால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது என்று மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அந்தப் பெண்ணின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் இரத்த வெள்ளத்தில் நபர் ஒருவர் கிடப்பதை அவதானித்துள்ளனர்.

இதன்போது அந்த நபர் பொலிஸாரினால் மஹியங்கனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது, அவர் ஏற்கனவே இறந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இறந்தவர் கபுருகஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது மஹியங்கனை வைத்தியசாலையில் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மரணித்தவரின் மனைவி மஹியங்கனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மக்களின் வரிப் பணத்தை வீணடித்துள்ள ஜனாதிபதியின் வடக்கு மாகாண விஜயம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெந்தி தெரிவிப்பு

ஜனாதிபதியின் வடக்கு விஜயம், மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாத மக்களின் வரிப் பணத்தை வீணடித்த வெற்றுப் பயணமாகவே அமைந்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி தலைமையகத்தில் நேற்று (06) சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன. இந்த நெருக்கடி நிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

காணி விடுவிப்பு, மீள்கட்டுமானம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, மற்றும் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு என்று தமிழ் மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு துண்டு காணியையேனும் அந்த மக்களுக்கு விடுவித்துக் கொடுக்கவில்லை.

நான் கொழும்பிலிருந்து வருகை தரும்போது வடக்கு அதிகாரிகள் சிலருடன் கதைத்தேன். ஜனாதிபதி விஜயம் எவ்வாறு இருந்தது என்று அவர்கள் கூறினார்கள். வாகனப் பவனியைக் கண்டு இரசித்தனர் என்று கூறினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யாழ். விஜயத்தை எதிர்த்து யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் போராட்டம் நடைபெற்றது. ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த போராட்டக்காரர்களைப் பொலிஸார் இழுத்துச் சென்றதையும் தாக்குதலுக்கு தயாராக இருந்த பொலிஸாரையும் ஊடகங்களில் ஊடாகப் பார்த்தேன்.

நாட்டை அதல பாதாளத்துக்குக் கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி கதிரையில் இருந்து மக்கள் விரட்டியடித்த போது ரணில் விக்கிரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியானார். நாட்டை முன்னேற்ற போகிறேன் எனக் கூறிக்கொண்டு நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கும் செயற்பாட்டில் ரணில் விக்கிரமசிங்காக ஈடுபட்டு வருகிறார்.

நாட்டை பாதுகாப்பதற்காக பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்பினர் மேற்கொள்ளும் போராட்டங்களை பாதுகாப்பு தரப்பினர் மூலம் அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்.

எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என அரசியல் அமைப்பு கூறுகின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கதிரையில் மீண்டும் அமர்வதற்காகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காது வடக்குக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

வட மாகாணத்தின் வளம் மிக்க பகுதிகளான மன்னார், பூநகரி, தீவகம் போன்ற பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு இருக்கும் நிலையில் அந்தப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை.

நாடு பொருளாதார ரீதியில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் ஜனாதிபதி ஆடம்பரமாக வாகன தொடரணிகள் சகிதம் வருகை தந்து நான்கு நாள்கள் வடக்கில் முகாமிட்டமை மக்களின் பிரச்சினையை தீர்க்க அல்ல. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரமே இது.- என்றார்.

# காலிச் சிறைச்சாலையில் காய்ச்சல்; 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி!

காலிச் சிறைச்சாலையில் தற்போது 7 கைதிகள் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று காலி சிறைச்சாலை அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

05 கைதிகள் காய்ச்சல் காரணமாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (06) மேலும் இரு கைதிகள் காய்ச்சல் காரணமாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் காய்ச்சலால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் இறந்துள்ளார். மூளைக் காய்ச்சலால் அவர் இறந்தமை பிரேதப் பரிசோதனையில் தெரியவந்தது.

இதேவேளை, காலிச் சிறைச்சாலையில் பார்வையாளர்களைப் பார்ப்பதும் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவும் புதிய கைதிகளை அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பவும் சிறைச்சாலை கட்டுப்பாட்டு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# தென்னிலங்கையின் முதலீட்டுத் தளமாக பூநகரி அபிவிருத்தித் திட்டம் அமைகிறதா?

## செல்வராஜா கஜேந்திரன் எம்.பி. கேள்வி

பூநகரி அபிவிருத்தி திட்டம் ரணில் அரசின் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக மாற்றப்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (06) இடம்பெற்ற, மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 24 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு, பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்க வடக்குக்கு விஜயம் செய்து பெரிய ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார்.

பூநகரியில் அபிவிருத்தி திட்டம் செய்யப் போவதாக அங்கு கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார். 500 மில்லியன் ரூபா அவசர அவசரமாக ஒதுக்கப்பட்டு பூநகரி அபிவிருத்தி என்ற பெயரில் அது அரங்கேற்றப்படுகின்றது.

அந்த அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அந்த பிரதேசத்து மக்களுடன் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த 2 ஆம் திகதி பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட அந்தக் கூட்டத்தில் வடமாகாண அதிகாரிகள் கலந்து கொண்டனர். அந்தத் திட்டத்தை அப்போது விளங்கப்படுத்த முற்பட்டிருந்தார்கள்.

அந்தத் திட்டம் தயாரித்து அவர்கள் கொண்டு வந்திருந்தார்கள். அந்தத் திட்டம் தயாரிப்பதற்கு முன்னதாக அந்த பிரதேசத்து மக்களுடன் எந்தவிதமான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.


அந்தக் கூட்டம் சிவில் அமைப்புக்களுடன் என்று கூறப்பட்டாலும் வெறும் ஈபிடிபி ஆதரவாளர்கள் 10 பேருடன் தான் நடைபெற்றது.

ஏனையவர்கள் அனைவரும் திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாக இருந்தார்கள்.

அந்த அபிவிருத்தி அந்த பிரதேசத்துக்குப் பொருத்தமானதா, இல்லையா எனக் கருத்துச் சொல்லக் கூடிய எவரும் அங்கு கலந்து கொண்டிருக்கவில்லை.

பூநகரி, பொன்னாவெளி என்ற இடத்தில் ஒரு சில வருடங்களாக சீமெந்துக்காக சுண்ணக்கல் அகழ்தல் தொடர்பான பிரச்சினை உள்ளது.

அகழ்வுக்கு எதிராக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அந்த பூநகரிப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள்.–என்றார்.



# பிறப்பு எண்ணிக்கை வீதம் இலங்கையில் வீழ்ச்சி நிலை!

இலங்கை பிறப்பு எண்ணிக்கை வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இந்திரல் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் கணிசமான அளவு பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால், 2027 ஆம் ஆண்டளவில் நாட்டின் சனத்தொகை 23.1 மில்லியனுக்கு குறைவடையலாம்.

இலங்கையிலுள்ள திருமண வயதை அடைந்த இளம் சமூகத்தினர் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்தல் மற்றும் திருமணம் செய்து கொள்ள விரும்பாமை போன்ற காரணிகளே பிறப்பு வீதத்தை பாதித்துள்ளது.

வருடாந்த உலக சனத்தொகையில் பிறப்புகளின் எண்ணிக்கை 134 மில்லியனாக இருந்த போதிலும், இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை ஆயிரம் பேருக்கு 12 குழந்தைகளாகக் குறையலாம்.– என்று குறிப்பிட்டுள்ளார்.



# வாழ்க்கையை நகர்த்த முடியாது நெருக்கடியில் இலங்கை மக்கள்!

## மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு

மக்கள் அன்றாட வாழ்க்கையை முன்னகர்த்த முடியாது நெருக்கடியில் சிக்கியுள்ளனர் என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என்ற எமது தீர்மானங்கள் சரியானவை என்று பொது மக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் தற்போது வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வற்வரி அதிகரிப்பு தொடர்பில் கருத்துக்களை வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமை ஒன்று ஏற்பட்டபோது அதனை உள்நாட்டு நிலைமைகள் ஊடாகச் சீர் செய்ய முடியும் என்ற விடயத்தை நாம் கடந்த காலங்களில் தொடர்சியாக வலியுறுத்திக் கூறினோம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதால் நிலைமைகள் மேலும் மோசமடையும் என்று சுட்டிக்காட்டினேன். குறிப்பாகச் சதாரண மக்களின் அன்றாட வாழ்வாதார நிலைமைகள் நெருக்கடிக்குள்ளாகும் என்றும் குறிப்பிட்டேன்.

எனினும், அச்சமயத்தில் என்மீதும் அப்போதைய அரசின் மீதும் மிகக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவில்லை என்று குறிப்பிட்டு எனக்கு எதிராக நீதிமன்றத்தைக் கூட நாடியிருந்தார்கள்.

ஆனால், தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தை நாடினார்கள். நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாவது தவணைப் பணத்தையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனால், தற்போது மக்கள் மீது வரிச்சுமை அதிகரித்துள்ளது. மக்கள் அன்றாட வாழ்க்கையை முன்னகர்த்த முடியாது நெருக்கடியில் சிக்கியுள்ளனர். இந்த தருணத்தில் பலர், நாம் ஏலவே தெரிவித்த கருத்துக்களும், தீர்மானமும் சரி என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

அதனை பொது மக்களும் ஏற்றுக்கொள்ளும் காலமும் வந்துவிட்டது. அந்த அடிப்படையில் ஒரு விடயத்தைக் கூற வேண்டியுள்ளது.

குறிப்பாக ஆற்றில் குதிப்பதற்கு முன்னதாக அங்கே முதலைகள் இருக்கின்றனவா என்பதை ஒன்றுக்கு இரண்டு, மூன்று தடவைகள் பரிசீலைக்கு உட்படுத்திய பின்னரேயே குதிப்பதற்கு தயாராக வேண்டும்.

அவ்வாறு இல்லாது விட்டால் தற்போதைய நிலைமைகளே உருவாகும் என்பது மிகத் தெளிவானது.-என்றார்.




# ஏப்ரலில் பல பொருள்களுக்கு வரியைக் குறைக்க யோசனை!

நாட்டில் பெறுமதி சேர் வரி அதிகரிப்பால் சிரமத்துக்கு உள்ளாகும் மக்களுக்கு நிவாரணமாக ஏப்ரல் மாதத்தில் பல பொருள்களுக்கான சுங்க வரியை குறைப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், மக்கள் மீதான வரிச்சுமை காரணமாக தேர்தலின் போது ஏற்படக் கூடிய பாதகமான சூழ்நிலையை தவிர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் பல பொருள்களுக்கான சுங்க வரியை குறைப்பது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது என்று அரச வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதேவேளை, லங்கா சதொச நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் பல உணவுப் பொருள்களின் விலைகளை மேலும் குறைக்க வர்த்தக அமைச்சு திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




# குறிஞ்சாக் கேணி பாலத்தின் உடைந்த பகுதி புனரமைப்பு!

(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் பிரதேச சபையையும் நகர சபையையும் இணைக்கும் குறிஞ்சாக் கேணி பாலத்தின் உடைந்த பகுதிகளைப் புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று (07)நடவடிக்கை எடுக்கப்பட்டது.



கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் பாலத்தின் புனரமைப்புக்காக மூடப்பட்ட நிலையில் இயந்திரப் படகு சேவை இடம் பெற்ற போது எட்டு உயிர்கள் பலியாகின.

இந்த நிலையில் திருத்தப் பணிகள் நிறுத்தப்பட்டு இருந்தன.

தற்காலிக உடைந்த பகுதியைச் சீர் செய்யும் முகமாக தற்காலிக இரும்புப் பாலம் ஒரு பகுதிக்கு அமைக்கப் படவுள்ளது.

இந்தப் பாலம் ஊடாக நாளாந்தம் ஆயிரக் கணக்கான மக்கள் பயணிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் பொது மக்கள் என பலர் இதன் ஊடாக பயணிக்கும் நிலையில் பாலம் புனரமைக்கப்படவில்லை. கடந்த அரசில் இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஊடாக அடிக்கல் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதிவான்கள் ஒன்றியம் சாய்ந்தமருதில் உதயமாகியது

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் கௌரவ பதவிகளில் ஒன்றான சமாதான நீதிவான்கள் ஒன்றியம் சாய்ந்தமருதில் உதயமாகியது.



இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய தேர்தால்கள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம், வளவாளராக எம்.ஐ.எம். சதாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது சீ பிரீஸ் வரவேற்பு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஒன்று கூடலின் போதே இந்த ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

இங்கு சமாதான நீதிவான்களின் பொறுப்புகள் அந்தப் பதவியின் கௌரவத் தன்மைகள் அதன் வரலாறுகள் தொடர்பில் வெகுவாக பிரஸ்தாபிக்கப் பட்டது.

ஒன்றியத்தின் தலைவராக பொறியலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், செயலாளராக எம்.எம். உதுமாலெப்பை, பொருளாளராக யூ.கே. காலித்தீன், உப தலைவராக எம்.எம். இஸ்மாயில், உப செயலாளராக எம்.பி. நௌசாத், காப்பாளராக முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம், ஆலோசகர்களாக ஏ.எம்.இப்றாகிம், எம்.ஐ.ஏ. ஜப்பார் ஆகியோரும் தெரிவாகினர்.



# கல்முனை, சாய்ந்தமருதில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம்.ஷினாஸ்)

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இன்று (07) நடைபெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன், கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பியலாளர் டாக்டர் எம்.ஏ.சி.எம். பஸால் ஆகியோரது ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜெ.கே.எம். அர்ஸத் காரியப்பரின் தலைமையில் சாய்ந்தமருது கடற்கரையில் டெங்கு ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான சாய்ந்தமருது பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டுக் களப் பணியாளர்கள், கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதே போன்று கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர்.எம். அஸ்மி தலைமையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# ஊடகவியலாளருக்குச் செயலமர்வு!





(ரஸீன் ரஸ்மின்)

வெகுசன ஊடக அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் என்பன இணைந்து வடமேல் மாகாண அச்சு, இலத்திரனியல் ஊடகவியலாளர்களுக்கு இரண்டு நாள் வதிவிட செயலமர்வை நடத்தின. குருநாகலில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

ஊடக பணியாளர்களின் திறன் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறந்த எழுத்து மற்றும் பயனுள்ள அறிக்கையிடலுக்கு ஊடகவியலாளர்களை மேம்படும் நோக்கில் இந்த இரண்டு நாள் வதிவிட செயலமர்வு நடத்தப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சின் அபிவிருத்தி பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் டபிள்யூ. பி.செவ்வந்தி தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

செயலமர்வின் முதலாவது நாளான வெள்ளிக்கிழமை (05) வெகுஜன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த செயலமர்வில் வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் ஈ. எம்.எஸ்.பி.ஜயசுந்தர, அமைச்சின் தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஆர்.எம்.ஜயந்த ரஸ்னாயக்க, சட்ட அதிகாரி சட்டத்தரணி டி.பி. உரேகா வெலரத்ன உட்பட வெகுஜன ஊடக அமைச்சின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் மஹிந்த பத்திரன, சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹான் சமரநாயக்க, சுயாதீன தொலைக்காட்சி தலைவர் சட்டத்தரணி சுதர்சன குணவர்தன ஆகியோர் செயலமர்வில் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

இந்த செயலமர்வில் புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

செயலமர்வில் கலந்துகொண்ட வடமேல் மாகாண ஊடகவியலாளர்களுக்கு நாட்குறிப்பேடு, ஊடக மேலங்கி மற்றும் சான்றிதழ் என்பன அதிதிகள் மற்றும் வளவாளர்களால் வழங்கப்பட்டன.



## நகர அபிவிருத்தி அதிகார சபையின்

# அடுக்கு மாடிக் குடியிருப்பாளருக்கு வீட்டு உரிமைப் பத்திரம் வழங்கல்

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களில் 50 வீதமானவர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் வீட்டுரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் 14 ஆயிரத்து 542 பேர் வசித்து வருகின்றனர். அதன்படி, முதற்கட்டமாக 50 சதவீதம் பேருக்கு வீட்டுரிமைப் பத்திரம் வழங்கப்படும். ஏனைய அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏற்பட்டுள்ள சட்ட மற்றும் பிற சிக்கல்களைத் தீர்க்க சிறிது காலம் எடுக்கும் என்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை கூறுகிறது.

பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதும் ஏனையோருக்கும் உரிமைப் பத்திரங்களை வழங்குமாறு, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தமக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த கொள்கைப் பிரகடனத்தில் அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கான உரிமைப் பத்திரங்களை வழங்குவது துரிதப்படுத்தப்படும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் இவ்வருடம் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் பத்தரமுல்லை செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (5) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அடுக்குமாடி குடியிருப்பில் வசித்த முதல் உரிமையாளர்களின் பிள்ளைகளுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளக் காடாக வயல் நிலங்கள்!



(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்டக்காடு, மயிலப்பஞ்சேனை,சோலை வெட்டுவான் முதலான இடங்களில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் வெள்ளக் காடாக நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் சுமார் 250 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் இந்த முறை பெரும்போக வேளாண்மை பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பராக்கிரமபாகு சமுத்திரம், மகாவலி, கந்தளாய்க்குளம் முதலான பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பல ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இவ்வாறு வெள்ள நீரில் மூழ்கிய பகுதிகளில் ஒன்றான கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட கண்டக்காடு, சோலை வெட்டுவான் முதலான இடங்களில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் வெள்ளக் காடாகக் காணப்படுகின்றன.

இதனால் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளனர் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



# ஈழத்தில் முதல்முறையாக ஜல்லிக்கட்டு

## தமிழரின் தொன்மை கூறும் வீர விளையாட்டு

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு ஜனவரி மாதம் நடக்கும். தமிழ் நாட்டில் மதுரையில் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் உலகெங்கும் புகழ்பெற்றவை.

தற்போது ஈழத்தில் முதல்முறையாக சம்பூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றுள்ளது. இதில் பல காளைகளும், காளை அடக்கும் வீரர்களும் ஆர்வமாக கலந்து கொண்டனர்.

### ஜல்லிக்கட்டும் வண்டிச் சவாரியும்

ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம்மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்த தொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பி இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

அதனைப் போலவே தமிழ் நாட்டில் ஏறுதழுவுதல், ஏறுகோள், மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, பொல்லெருது பிடித்தல் என்று தமிழுகத்தின் பல பகுதிகளில் பல பெயர்களில் தமிழர்களின் வீர விளையாட்டாம் ஏறுதழுவுதல் பொங்கல் நாள்களில் சிறப்புடன் காலங்காலமாக நடத்தப்படுகின்றன.

### இலக்கியத்தில் ஜல்லிக்கட்டு

பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் பல உள்ளன. ஏறு தழுவுதல் (மஞ்சு விரட்டுதல்) என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயின்று வருகிறது. இவ்விளையாட்டு, முல்லை நில மக்களின் திருமணத்துடன் தொடர்புடையதாகப் பண்டைக் காலத்தில் இருந்ததாகவும் அறியப்படுகிறது.

ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது, அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு. தமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் ஜல்லிக்கட்டின் "சொர்க்க பூமியாக " இன்னும் திகழ்கிறது.

முல்லைநில மக்களின் வீரவிளையாட்டாக இருந்தாலும் தென் தமிழகத்தின் மதுரை மாவட்டம் சார்ந்த பகுதிகளில் இந்த விளையாட்டு இன்றும் ஆர்வமாக நிகழ்த்தப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் கூட மதுரை ஜல்லிக்கட்டு போட்டிகளைப் பார்க்கப் பார்வையாளர்கள் குவிவது வழக்கம். தமிழகத்தில் சில ஆண்டுகள் ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்ட போதிலும் 2017 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜல்லிக்கட்டு நடந்து வருகிறது.

இந்த ஆண்டுக்கான முதல் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அடுத்துள்ள தச்சங்குறிச்சி என்ற இடத்தில் நடக்கிறது.

### கிழக்கு மாகாணம் சம்பூரில் ஜல்லிக்கட்டு

தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் சுற்றுலாத் துறை சார்பில் பொங்கல் விழாவை முன்னிட்டுச் சம்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு வாரம் இந்த பொங்கல் விழா நடக்கும் நிலையில், திருகோணமலை, சம்பூர் பகுதியில் அமைந்துள்ள மைதானத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகள் இடம்பெறுள்ளன.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் சுமார் 200 காளைகளும், சுமார் 100க்கும் மேற்பட்ட வீரர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

ஈழத்தில் முதல்முறையாக ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெறும் நிலையில், அதைக் காணப் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஒன்றுகூடினர்.





# கிழக்கில் சிலம்பம் மற்றும் பீச் கபடி!

## பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் பங்கேற்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டைமானின் ஏற்பாட்டின் பொங்கல் விழாவை முன்னிட்டுப் பல்வேறுப்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று திருகோணமலையில் கடற்கரையில் ஆண், பெண் இருபாலரும் பங்கேற்ற சிலம்பம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் பங்கேற்றார்.

சிலம்பம் மற்றும் பீ ச் கபடி நேற்று ஆரம்பமாகித் தொடர்ச்சியாக இன்றும் (07) இடம்பெற்று வருகிறது. அதற்கான இறுதிப் போட்டி நாளை 8 ஆம் திகதி நடைபெறும்.












# சென்னையில் 540 கோடி ரூபா செலவில் நவீன திரைப்பட நகரம் அமைக்கப்படும்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை பூந்தமல்லியில் 540 கோடி ரூபா மதிப்பில் நவீன திரைப்பட நகரம் அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 'கலைஞர் 100' விழாவில் அறிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம் சார்பில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா 'கலைஞர் 100' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், நடிகர்கள், ரஜினி, கமல், வடிவேலு உள்ளிட்ட ஏராளமான திரையுலகினர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"பல்வேறு அமைப்புகள் இந்த கலைஞர் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில், கலைஞரின் மகன் என்ற முறையில் உங்களுக்கு நன்றி கூறிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.



பெற்றோர் வைத்த பெயரை கூட கூப்பிடாமல் 'கலைஞர்' என்று தொண்டர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர் கருணாநிதி. அவர் மறைந்த போது தமிழ்நாடே கலங்கி நின்றது.

இந்த அரசு திரைத் துறையினருக்கு பல்வேறு திட்டங்களை தீட்டிக் கொண்டு இருக்கிறது. அமைச்சர் உதயநிதி சினிமா துறையில் கால் பதித்தவர்.

பூந்தமல்லியில் 540 கோடி ரூபா மதிப்பில் நவீன திரைப்பட நகரம் அமைய உள்ளது. 25 கோடி ரூபா மதிப்பில் எம்ஜிஆர் திரைப்பட நகரம் மேம்படுத்தப்படும்" – என்றார்.

# டில்லியில் தொடரும் கடும் குளிர்: பாடசாலைகளுக்கு விடுமுறை நீடிப்பு



டில்லியில் கடும் குளிர் நிலவுகிறது. பாலர் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான அரசு மற்றும் தனியார் பாடசாலைகள் அடுத்த 5 நாள்களுக்கு மூடப்படும் என கல்வித்துறை அமைச்சர் அதிஷி அறிவித்துள்ளார்.

டில்லியில் நிலவும் கடும் குளிர் காரணமாக கடந்த 1 ஆம் திகதி முதல் விடுமுறை அளிக்கப்பட்டு நாளை திங்கள்கிழமை திறக்கப்பட இருந்தது. ஆனால் குளிரின் தாக்கம் குறையாத காரணத்தால் இந்த விடுமுறையானது மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கவுதம்புத் நகரில் மாவட்ட நிர்வாகம் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விடுமுறை அறிவித்துள்ளது.

டில்லி மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாள்களாக குளிர் வாட்டி வதைக்கிறது. வெப்பநிலை இயல்பைவிட குறைந்துள்ள நிலையில் வீதி முழுவதும் பனியால் போர்த்தப்பட்டு காணப்படுகிறது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம், "பஞ்சாப், ஹரியானா, டில்லி, சத்தீஸ்கர், ராஜஸ்தான் பகுதிகளில் நிலவி வரும் குளிரானது கடுமையான குளிராக மாறி அடுத்த 2 நாள்களுக்கு இதே நிலை தொடரும். பின்னர் படிப்படியாக குறையும்" எனத் தெரிவித்துள்ளது.

# உலகின் பார்வை இந்தியாவின் பக்கம்: ஜெய்சங்கர் பெருமிதம்

சர்வதேச அளவில் நடைபெறும் உரையாடல்கள் இந்தியாவின் பக்கம் திரும்பி இருப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற வளர்ச்சி அடைந்த பாரதமே லட்சியம் எனும் யாத்திரையில் பங்கேற்று ஜெய்சங்கர் உரையாற்றுகையில்,

"வெளியுறவுத் துறை அமைச்சர்




என்பதால் நான் உலகம் முழுவதும் செல்கிறேன். உலக நாடுகள் இன்று இந்தியா குறித்தே பேசுகின்றன. இந்தியாவால் எப்படி இவ்வாறு செயல்பட முடிகிறது என்று கேட்கிறார்கள். 10, 20, 30 ஆண்டுகளுக்கு முன்பும் இதே இந்தியாதான் இருந்தது. இந்தியாவில் என்ன மாறி இருக்கிறது என்றால், அதன் கண்ணோட்டம் மாறி இருக்கிறது.

இந்திய மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த பிரதமர் நரேந்திர மோடி மிகச் சிறந்த பணிகளை ஆற்றி இருக்கிறார். " – என்றார்.

# பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு







பங்களாதேஷ் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று இடம்பெறுகின்றது. எதிர்க்கட்சிகள் இந்த தேர்தலை புறக்கணித்துள்ளன.

இந்த நிலையில், பல தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சுமார் 20 வாக்களிப்பு நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகி உள்ளன.

அண்மைய நாள்களாக, ஆளும் கட்சியான அவாமி லீக் கட்சிக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருகின்றன, இதில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 2 ஆயிரம் ஆதரவாளர்கள் வரை கைது செய்யப்பட்டனர்.

300 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளுக்காக இந்தத் தேர்தல் நடைபெறுகிறது.

சுயேட்சை வேட்பாளர் மரணமடைந்ததால் 299 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. அந்த தொகுதிக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வாக்களிப்பு நிலைய பாதுகாப்பிற்காக 7 லட்சம் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்பில் 120 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர் என அந்த நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# பிரித்தானியாவில் ஹென்க் புயல்: நகரங்கள் பல வெள்ளத்தில் மூழ்கின

பிரித்தானியாவில் ஹென்க் புயலின் தாக்கம் காரணமாக வெள்ளப்பெருக்கு மற்றும் போக்குவரத்து பாதிப்பு தொடர வாய்ப்பிருப்பதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், அந்த நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஆயிரம் வீடுகள் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.

மேலும், பாதைகளில், வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதன்படி இங்கிலாந்து முழுவதும் ரயில் போக்குவரத்து தாமதமாகலாம் அல்லது இரத்து செய்யப்படலாம் என அந்த நாட்டின் ரயில்வே நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.



இதன்படி வெள்ளம் காரணமாக பிரிதானியாவின் குளோசெஸ்டர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள வீதிகள் மூடப்பட்டுள்ளன.

இதனிடையே வெப்பநிலை தென்மேற்கு இங்கிலாந்தின் கிராமப்புற பகுதிகளில் 4 செல்சியஸ் வரை குறைய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# ஏறாவூரில் இரத்ததான முகாம்!

**( அஸ்ஹர் இப்றாஹிம்)**

"உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் செய்யட் அஹமட் தலைமையில் ஏறாவூர் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் மாபெரும் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைகளின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத்தும் கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகர சபையின் விசேட ஆணையாளர் ஹமீம், ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் முகைதீன், ஏறாவூர் ஜம்இய்யதுல் உலமா சபையினுடைய தலைவர் அஷ்செய்க் சாஜித் ஹூசைன், சமூக சேவை உத்தியோகத்தர் நஜிமுதீன், கிராம சேபை உத்தியோகத்தர் சீராஸ், சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஆலோசகர்களான முபாறக், றிபாய்தீன், ஹனீபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள், குருதிக் கொடையாளிகள் இரத்ததான முகாமில் பங்கேற்றனர்.







# மலையகத்தில் டெங்கு வேலைத் திட்டம்!

(பொகவந்தலாவ நிருபர், மஸ்கெலியா நிருபர்)

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைய பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று (07) ஞாயிற்றுக்கிழமை டெங்கைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுத்தப்படுத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தில் ஹட்டன் பொலிஸ் வலையத்துக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிப்புன தெய்கம பொகவந்தலாவ, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பண்டார, பொகவந்தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி, பொகவந்தலாவ பொது சுகாதார பரிசோதகர்கள், பொகவந்தலாவ வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஸ். கே.ஜயசூரிய, பொகவந்தலாவ ஓட்டோ சாரதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த வேலைத் திட்டத்தில் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலை, பொகவந்தலாவ பிரதான பஸ் தரிப்பிடம், பொகவந்தலாவ சென்மேரீஸ் தேசிய பாடசாலை ஆகிய பகுதிகளில் டெங்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, மஸ்கெலியா பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு நிகழ்வு இன்று (07) மஸ்கெலியா பிராந்திய வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

ஹட்டன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் 2 ஜயசிங்க, மஸ்கெலியா பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் புஷ்ப குமார மற்றும் மஸ்கெலியா பொலிஸ் பிரதேச சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள், மஸ்கெலியா பிராந்திய சபையின் சுகாதார திணைக்கள அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், மஸ்கெலியா வைத்தியசாலை ஊழியர்கள், மருத்துவ அலுவலக ஊழியர்கள், மஸ்கெலியா நகர் வர்த்தகர்கள் நகரில் உள்ள ஓட்டோ சாரதிகள் மற்றும் தோட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.







# மடு மாதாவுக்கு மணிமுடி சூடிய நூற்றாண்டு திருச்சொரூபம் பங்குகளுக்குத் திருப்பயணம்!

**(மன்னார் நிருபர்)**

மடு மாதாவுக்கு மணிமுடி சூடிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு மாதாவின் திருச்சொரூபம் மன்னார் மறைமாவட்ட பங்குகளுக்கு திருப்பயணமாக எடுத்துச் செல்லும் நடவடிக்கை இன்று (07) ஞாயிற்றுக் கிழமை காலை மடு திருத்தலத்தில் இருந்து ஆரம்பமாகியது.

1924 ஆம் ஆண்டு கொழும்பு ஆயரும் அவருடன் இணைந்து இந்தியாவிலிருந்து வந்த ஆயரும் மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு 25 ஆவது ஆண்டு யூபிலியை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட பாதுகாவலியாம் மடு அன்னையின் திருச்சுரூபம் மன்னார் மறைமாவட்ட பங்கு தலங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழமை.

இதற்கமைய இவ்வருடம் மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்டு 100 ஆவது ஆண்டு யூபிலியை முன்னிட்டு மடு அன்னையின் திருச்சுரூபம் மடுவிலிருந்து பயணத்தைத் தொடங்கியுள்ளது. மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய மன்னார் மறை மாவட்டங்களின் பங்குத் தலங்களுக்கு இன்று ஞாயிறு (07) முதல் கொண்டு செல்லப்படுவதற்கு சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை (07) காலை 8 மணியளவில் மடு அன்னையின் திருச்சுரூபம் அன்னை வீற்றிருக்கும் சிம்மாசனத்தில் இருந்து இறக்கப்பட்டு மன்னார் பேராலயத்துக்கு எடுத்து வரப்பட்டது.

மன்னார் தள்ளாடி சந்தியில் இருந்து மன்னார் நகர் வரை மோட்டார் சைக்கிள் பவனியூடாக மடு அன்னை ஊர்தியில் அழைத்து வரப்பட்டார்.

மடு அன்னையின் திருச்சுரூபம் இறைமக்களின் தரிசிப்புக்காக இன்று ஞாயிறு (07) காலை 11.30 மணியிலிருந்து நாளை திங்கட்கிழமை (08) காலை 8 மணி வரைக்கும் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மறை மாவட்டத்தின் ஏனைய பங்குகளை நோக்கி மடு அன்னையின் திருப்பயணம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.







